













முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணியின் கீழ், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அடையாறு ஆற்றின் கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி – 1.218 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து

# மெட்ரோ நிலைய சுரங்கம் தோண்டும் பணி : முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

## பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்!

**சென்னை, பிப்.15-**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையப் பகுதியில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.02.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணியின் கீழ், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**நாளொன்றிற்கு சராசரியாக 3.1 இலட்சத்திற்கும் மேல் பயணம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அப்போதைய துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பணிகள் தொடங்கப்பட்ட 54.1 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் இரண்டு வழித்தடங்களில் முழுமையாக பயணிகள் சேவை இயக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நாளொன்றிற்கு சராசரியாக 3.1 இலட்சத்திற்கும் மேல் பயணம் செய்து வருகின்றார்கள்.

**அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலைய பகுதியில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தல்**

அதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் கட்டம்II இன் கட்டுமானப் பணிகள், 3 வழித்தடங்களில், 118.9 கி.மீ நீளத்தில் 128 இரயில் நிலையங்களுடன் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இப்பணிக்காக 23 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, கட்டம்IIஇல் மொத்தம் 42.6 கி.மீ நீளத்திலான சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வழித்தடம் 3இல் மட்டும் 26.7 கி.மீ நீளத்தில் மாதவரம் – கெல்லீஸ் மற்றும் கெல்லீஸ் – தரமணி ஆகிய இரண்டு பகுதிகளாக சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இரண்டாவது பகுதியான கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரை வருகிறது.

**பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் முடிக்க முதல்வர் உத்தரவு!**

பல்வேறு விதமான மண் தன்மைகள், கடினமான பாறைகள், அதிநீரோட்ட பகுதிகள் மற்றும் நகர்ப்புறத்திற்கென இடர்பாடுகள் ஆகிய சிக்கலான சவால்களை வெற்றிகரமாக சந்தித்து, அடையாறு என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் ஜூன் 2023இல் சுரங்கம் தோண்டும் பணிகளை கிரீன்வேஸ் சாலை மெட்ரோ நிலையத்திலிருந்து தொடங்கி, அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையத்திற்கு அருகில், அடையாறு ஆற்றின் கீழ் சுமார் 40 முதல் 50 அடி ஆழத்தில் 300 மீட்டர் நீளத்திற்கு அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளிவந்தது. செப்டம்பர் 2024இல் காவேரி என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம், டவுன்லைன் சுரங்கம் தோண்டும் பணியினை முடித்துள்ளது.

சுரங்கம் தோண்டும் இயந்திரம் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளிவந்தது. இந்த முக்கியமான பணியினை முதலமைச்சர் அவர்கள் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இப்பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் முடித்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2025) சென்னை, வளசரவாக்கத்தில் டாக்டர் மணமல்லி அன்பழகன் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள பேராசிரியர் அரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெற்றியழகன், தாயகம் கவி, மருத்துவர் நா. எழிலன், காரப்பாக்கம் க. கணபதி, எம்.கே. மோகன், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, பேராசிரியர் அவர்களின் மகன் அ. அன்புச்செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நெல் கொள்முதல் நிலையங்களில்

# நாளொன்றுக்கு 1000 மூட்டைகள் கொள்முதல் செய்திட வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!

*சென்னை, பிப். 15 -*

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் உணவுத் துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



ஆய்வுக்கூட்டத்தில், கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கத்தைப் பற்றியும் வரும் ஆண்டிற்கான அறிவிப்புகள் பற்றியும் கேட்டறிந்தார். நெல் கொள்முதல், நெல் இருப்பு மற்றும் நகர்வு பற்றி ஆய்வு செய்தார். நெல் கொள்முதலில் தற்போதுள்ள நடைமுறைப்படி நாளொன்றுக்கு ஒவ்வொரு நெல் கொள் முதல் நிலையத்திலும் கொள் முதல் செய்யப்படும் உச்ச வரம்பினை 32 டன்னிலிருந்து (800 மூட்டைகள்) 40 டன்னாக (1000 மூட்டைகள்) உயர்த்திக் கொள்முதல் செய்ய அறிவுறுத்தினார். நெல் விவசாயி களின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு ஏக்கருக்குத் தற்போது நிர்ணயித்துள்ள 2400 கிலோ (60 மூட்டைகள்) நெல்லினை 2800 கிலோவாக (70 மூட்டைகள்) உயர்த்திடவும் அறிவுறுத்தினார். நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகமான நெல் வரத்து இருந்தால், இரண்டு இயந்திரங்கள் வைத்து நெல் கொள்முதல் செய்திடவும் கூறினார்.

பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் பொதுமக்களுக்கு கனிவான முறையில் சேவை செய்திடவும் அனைத்துப் பொருட்களையும் தரத்துடன் ஒரே நேரத்தில் வழங்கிடவும் கடைகளுக்கு வரும் பொருட்களின் எடை சரியாகவும் வழங்கப்படும் பொருட்களின் எடை சரியாக இருப்பதையும் ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மாநில எல்லையோரங்களில் அரிசிக் கடத்தலைத் தடுத்திட கண்காணிப்புப் பணியைத் தீவிரப்படுத்திடவும், டீசல் கலப்பினை நிறுத்திடவும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய் வுத்துறையின் காவல் துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பயன்பாட்டினை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் அதிக அளவில் சேவை செய்து வருமானத்தை அதிகப் படுத்திடவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக்கூட்டத்தில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முக சுந்தரம், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த. மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சா.ப. அம்ரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்பு லனாய்வுத் துறை காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா, மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புற்று நோய் நோயாளிகளின் புத்துணர்வு மையம் கட்டடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் ரூபாய் 1 கோடிக்கான காசோலையை அமைச்சரிடம் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், ஆணையாளர் சு.இராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், ஆ.சக்திவேல், மரு.ஆ.முருகநாதன், மரு.முருகேசன், ஈ.தங்கராஜ், எம்.எஸ்.ஆர்.ராஜ், சே.சுகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

